# *சொல்வதெல்லாம் உண்மை*

*ஈழத்தமிழரின் எதிர்காலம் ஒரு குறுகிய முனையில் வந்து நிற்கிறது.அடிப்படை சம உரிமைகளுக்காக ஆரம்பிக்கப் பட்ட தமிழரது சாத்வீகப் போராட்டம் கூர்மைப் படுத்தப்பட்டு ஆயுதப்போராட்டமாக விஸ்தரிக்கப்பட்டு இன்று மீண்டும் அரசியல் களத்தில் ஆரவாரப்பட்டுக் கொண்டிருக்கிறது.*

*ஒரே கப்பல், ஒரே இலக்கை நோக்கிப் பயணப்படத் தொடங்கியது. பல்வேறு அகப்புறச் சுழல்களினால் பாதிக்கப்பட்டதால் அப்பயணத்தைச் செலுத்தும் முறையில் கருத்து வேறுபாடுகள் எழுந்தன அக்கப்பலை இலக்கை நோக்கி நடத்த பல்வேறு மாலுமிகள் தங்கள் தலைகளில் தாமே மகுடத்தைச் சூட்டிக் கொண்டு பிரயாணிக்கத் தொடங்கினர்.*

*அதிலே ஒரு மாலுமி தந்திரமாக அனைத்து மாலுமியரையும் கடலிலே தள்ளி விட்டு தன்வழியே தனிவழி வெற்றிக்குரிய வழி என்று வாழ்வுக்குப் பயந்த பிரயாணிகளை தமது கையிலிருந்த ஆயுதத்தைக் கொண்டு அடக்கி பிரயாணத்தை மேற்கொண்டார். பயணித்த பயணிகளுக்கோ கப்பலில் இருந்தால் கடைசியில் கவிழ வேண்டும் என்று தெரிந்தாலும் அதற்குப் பயந்து வெளியே குதித்தாலோ ஆழியினுள் சிக்கி உயிர்விட வேண்டிய நிலை என்பதால் சிக்கித் தவித்தார்கள்.*

*கடைசியாகக் கப்பலும் பாறையில் மோதி மாலுமியும் அவரது சகாக்களும் உயிரிழந்து இன்று அக்கப்பலிலே எஞ்சியிருக்கும் பயணிகள் திக்குத்திசை தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.*

*இதுதான் இன்றைய ஈழத்தமிழரின் நிலை.*

*பிரபாகரன் எனும் தனிமனிதனின் சரித்திரம் முற்றுப் பெற்று விட்டது. ஈழக்கனவை வாழவைக்கிறோம் எனும் கோஷத்தை முன்வைத்து பிரபாகரன் இன்னும் உயிருடன் இருக்கிறார் இதோ மீண்டும் வந்து ஈழப்போரின் நான்காம் கட்டத்தை நடத்தப் போகிறார் என்று அம்புலிமாமா கதை சொல்லித் தம் அரசியல் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் தமிழக அரசியல்வாதிகள் சிலர்.*

*அதைவிட புலம்பெயர் தமிழர்களில் பலர் தமது இருப்புக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஈழம் என்னும் வாடிப்போன பயிருக்கு தண்ணீர் ஊற்றி நேரத்தையும், பணத்தையும் விரயமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.*

*மேற்குலக நாடுகளில் சில தாமெடுத்த சில அவசர நடவடிக்கைகள், யுத்தங்கள் ஆகியவற்றினால் எழுந்த சிக்கல்களில் இருந்து கவனத்தைத் திருப்புவதற்காக யுத்ததர்மத்தை மீறிய ஜனநாயக அரசாங்கத்தின் மீது நடவடிக்கை என்று வேடிக்கையான நாடகங்களை ஜெனீவாவில் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.*

*ஈழத்தின் இறுதிக் கட்டப் போரில் வெற்றியடைந்து பிரபாகரனை ஒழித்து விட்டோம் என்று எக்காளமிட்டுக் கொண்டிருக்கிறது இலங்கை அரசு.*

*பிரபாகரன் என்னும் ஒற்றை மனிதனே தமிழினம் என்று தனிமனித வழிபாட்டை வளர்த்தமையால் இன்று பிரபாகரனை அழித்து விட்டதால் அனைத்து தமிழினத்தையும் ஒடுக்கி விட்டோம் என்ற நினைப்பில் ஸ்ரீலங்கா அரசை அமிழ்த்தியதில் வெளிநாட்டில் வாழும் புலம்பெயர் தமிழர் எடுத்த பங்கு அளப்பரியது.*

*இன்று ஈழத்தில் தமிழர்கள் சம உரிமையுடன் கௌரவமான வாழ்வைப் பெறவேண்டும் என்பதற்காக அல்லாமல் பிரபாகரன் எனும் தனிமனிதனின் சாவுக்கு பதில் கேட்டு இவர்கள் நடத்தும் போராட்டம் தான் வன்மையாக உள்ளது.*

அண்டைநாடான இந்தியாதான் இவ்விடயத்தில் நியாயமாக அக்கறை கொண்டவர்கள். தமிழர்களின் பிரச்சனையைத் தீர்க்கும் முயற்சியில் தமது நாட்டின் பிரதமரின் உயிரையே விலையாகக் கொடுத்தவர்கள். இன்று அவர்களது நாட்டுக்குள்ளேயே பிரச்சனைகளை உருவாக்கும் வகையில் ஈழத்தமிழர்களது பிரச்சனையை முடுக்கி விடுவதில் பலர் முனைந்து நிற்கிறார்கள்.

யாதர்த்த நிலைகளைச் சீர்தூக்கிப் பார்த்தால்,

என்றுமே ஈழத்தமிழருக்கு ஒரு தனிநாடு கிடைப்பதற்காக இன்று ஜெனீவாவில் குரல் கொடுக்கும் எந்தவொருநாடும் முன்வரப் போவதில்லை.

ஈராக்கிலே ஜனநாயகத்தை ஏற்படுதுகிறோம் என்று கூறி அங்கு ராணுவ ரீதியில் நுழைந்து பின்பு ஈராக்கிய மக்களுக்கிடையில் நடக்கும் உள்நாட்டு பிரச்சனைகளில் ஈராக்கியர்களையே பலியாக விட்டு தாங்கள் தமது ராணுவத்தை வாபஸ் வாங்கிக் கொண்டது போலவே ஈழத்தில் இதனால் உருவாகும் உள்நாட்டுக் கலவரங்களுக்கு இவர்கள் என்றுமே பொறுப்பெடுக்கப் போவதில்லை.

எப்படியும், எப்போதாவது ஆகக்கூடிய மாநில ஆட்சி கிடைத்தாலும் ஈழத்தமிழர்கள் சிங்களவர்களுடன் ஒருமித்த ஈழத்தில் வாழவேண்டியதுதான் நிதர்சனமான உண்மை.

இப்போது நடக்கும் இந்த முனைப்பான முன்னேடுப்புக்களால் ஆகப்போவது என்ன ? ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரலாம். ஒரு ராஜபக்ச போய் ஒரு பிரேமதாசா வரலாம். அப்படி வந்தால் அவர்கள் என்ன தமீழீழத் தனியரசைத் தாம்பூலத்தில் வைத்து வழங்கப் போகிறார்களா?

திரைகடலோடித் திரவியம் தேடி பார்புகழ் படைத்த தமிழர்கள் இன்று சிந்தனாதிறனவற்றவர்களாக எடுப்பார் கைப்பிள்ளைகளாக தமது எதிர்காலத்தைச் சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிரபாகரனதும், அவர் சார்ந்த இயக்கத்தினரது சர்வாதிகாரப் போக்கு என்றுமே ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதொன்றல்ல. இருப்பினும் இன்று பிரபாகரனோ அன்றி அவரது இயக்கமோ எங்கே தமது தணியாத தாகமான தமீழத்தாயகத்தைக் கோரினார்களோ அங்கே கால்பதிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

அவர்கள் மற்றைய இயக்க உறுபினர்கள் மீதும் தம்மோடு முரண்பட்டவர்கள் மீதும் எத்தகைய காட்டுமிராண்டித்தனத்தை கட்டவிழ்த்து விட்டிருந்தாலும் அவர்களுக்கு கிடைத்த முடிவுக்காக மனிதாபிமான ரீதியில் வருந்துவது தவிர்க்க முடியாததே.

இவற்றைத் தவிர்த்து இன்று வெளிநாடுகளில் வாழ்ந்து ஈழத்துத் தமிழர்களுக்கு தகுந்த தீர்வொன்றைப் பெற்றுத்தரப் போகிறோம் என்று கூறி பலவிதமான போராட்டங்களில் ஈடுபட்டு அங்கு வாழும் மக்களின் நாளாந்த வாழ்க்கையை குழப்பும் முயற்சி கண்டிக்கப்பட வேண்டியது.

உலகிலேயே வெல்லப்படடியாத விடுதலை வீரன் பிரபாகரனின் போராட்டத்தினால் தனிஈழம் பெற்றுவிடுவோம் என்று கோஷமெழுப்பிக் கொண்டிருந்தவர்கள் இன்று இங்கிலாந்து சனல் 4 காணொளியின் பின்னால் நின்று போராட வேண்டி வந்ததற்கான காரணத்தை ஒரு வினாடி சிந்திப்பார்களேயானால் உண்மை நிலையைத் உணர்ந்து கொள்வார்கள்.

இங்கிலாந்துச் சனல் 4 காணொளியில் காட்டப்பட்டது அனைத்தும் ஏன் ஒரு குறிப்பிட்ட பகுதிகளையையே காட்டியது? போருக்குப் பின்னால் யாழ்நகரில் பல அடுக்குமாடிக் கட்டிடங்களைக் கட்டித் தமது வியாபாரங்களைப் பெருக்கிக் கொண்ட புலம்பெயர் தமிழர்களின் இன்றைய யாழ்நகர் வாழ்க்கை ஏன் காட்டப்படவில்லை ?

ஈழத்தின் இறுதிப் போர் என்று ஸ்ரீஇலங்கா அரசாங்கத்தினால் வர்ணிக்கப்பட்ட போரில் பொதுமக்கள் உயிர்நீத்துள்ளார்கள் என்பது மறுக்கப்படமுடியாத உண்மை.

ஓரளவு இராணுவ அராஜகம் நடைபெற்றிருந்திருக்கும் என்பதும் உண்மை.

புலிகள் என்னும் பெயரைக் கேட்டாலே நடுநடுங்கிக் கொண்டிருந்த ராணுவம் அவர்களின் தலைமைப்பீடம் தமது கைகளுக்குள் என்னும் நிலை வந்ததும் காட்டுமிராண்டித்தனத்தை அவிழ்த்து விட்டிருந்திருக்க மாட்டார்கள் என்று நம்புவது தான் முட்டாள்தனமாகும்.

நாமே தனியாக ஈழத்தமிழினத்தைப் பிரதிநிதிப்படுத்துவோம் என்று கூறி ஒரு சந்ததி தமிழினத்தை நடுத்தெருவிற்கு கொண்டு வந்த அதே கும்பல் இன்று மிகுதித் தலைமுறையையும் சீரழிக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது.

தமிழருக்குத் தனிநாடு என்று அவர்கள் கோஷமிட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை தமிழ்ப்பகுதிகளின் இளம்தலைமுறை ஒரு கலாச்சார சீரழிவுக்குள்ளாகிக் கொண்டிருப்பதை யாரும் கண்டு கொள்ளத்தவறி விட்டார்கள்.

அரசியல் தஞ்சம் கோரி வெளிநாடு வந்த ஒரு இளம்தலைமுறை கட்டுப்பாடின்றி அந்நியநாடுகளின் சிறைகளுக்குள் தம்மைப் புகுத்திக் கொள்ளும் அளவிற்குச் சீர்கேடாக நடந்து கொள்வதையும் யாரும் கண்டு கொள்ளவில்லை.

வெறும் பிரபாகரனின் புகழ்பாடும் தனிமனித வழிபாட்டினால் தமது வாழ்வாதரங்களைத் தக்க வைத்துக்கொள்ளும் ஒட்டுண்ணி வேலைகளையே தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு இவர்கள் எதிர்காலத்தில் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

எம்து மண்ணிலே தமது அன்றாட வாழ்வினை எவ்வித இடையூறும் இல்லாமல் எமது உதிரத்து உறவுகள் நடத்தத் தேவையான பாதுகாப்பு உத்தரவாதத்தை முதன்மைப்படுத்தும் கோரிக்கைகளை ஒன்றிணைந்து முன்னெடுக்க இனியாவது சிதறுண்டு கிடக்கும் ஈழத்தமிழினம் முயலுமா?

கிடைக்கமுடியாத உரிமைகளை முன்வைத்து கிடைக்கக்கூடிய உரிமைகளைப் பின் தள்ளும் செய்கைகளை விடுத்து ஸ்ரீலங்கா அரசினால் தட்டிக்கழிக்க முடியாத வகையில் கோரிக்கைகளை முன்வைக்க நேசநாடுகளின் உதவியைக் கோர முயற்சிப்போமா?

தமிழர்களுக்கு அளிக்க வேண்டிய நியாயமான உரிமைகளை இனவாதிகளின் கடும்போக்கைக் காரணம் காட்டித் தாளிப்போடுக் கொண்டேயிருக்கும் ஸ்ரீலங்கா அரசு இனியாவது உண்மையான மனதோடு உரையாட வருவார்களா?

உலகத்தமிழினமே ! ஆனந்தசங்கரி போன்ற அன்றிலிருந்து இன்றுவரை மாறுபடா பேச்சுக் கொண்டு செயர்படும் மூத்த தலைவர்களை இனங்கண்டு தமிழ்மக்களுக்கென நியாயமான எதிர்பார்ப்புகளோடு இணைந்த லட்சியக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஈழத்தமிழரின் விமோசனத்துக்கு உழைப்பீர்களா ?

இல்லையானல் வருங்கால ஏடுகளில் கட்டப்பொம்மனோடு அல்ல எட்டப்பனோடுதான் உங்கள் சரித்திரம் இடம்பெறும்.

யாழ்பாடி